**உடபலாத பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடபலாத பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடபலாத பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள், கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்காக செய்த ரூபா 6,012,873 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது, சரி செய்வதென. | கட்டிட நிர்மாணம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 146,990 ஆன டெக்டர் டேலரொன்று ரூபா 44,000 ஆக கணக்கீடு செய்ததில் மோடார் வண்டி மற்றும் கரத்தை கணக்கு ரூபா 102,990 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | குறைத்து கணக்கீடு செய்ததனை சரி செய்வதென. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி நடைமுறை சொத்தின் கீழ் காண்பிக்கபட வேண்டிய போதும், மீளாய்வாண்டில் 02 நிலையான வைப்புக்களிற்குரிய பேற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 985,990 தொகை அந்த நிலையான வைப்புகளிற்கு கூட்டப்பட்டு | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி அட்டுறு செய்யப்படாமை சரி செய்வதென. | பெற வேண்டிய வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 21,375,767 ஆன போதும், அது ரூபா 21,141,042 ஆக கணக்கீடு செய்யப்பட்டதால், ஆண்டின் வருமானம் ரூபா 234,725 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில், சரி செய்வதென. | வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 127 பிரிவு | சபையினால் பயன்படுத்தப்படும் 65 மயானங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | | | |
| | இலக்கம் 59 மற்றும் 60 | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திர கணிப்பீடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் அனுமதிப்பத்திர கணிப்பீட்டை செயற்படுத்துவதென | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,277,350 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,371,185 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட் தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,345,375 | 2,858,268 | 3,533,730 | 3,418,956 | 2,399,000 | 5,748,890 | 6,482,593 | 4,094,418 |
| (ii) | வாடகை | 6,736,550 | 4,326,739 | 4,423,730 | 2,839,048 | 6,175,300 | 4,430,270 | 4,050,709 | 2,936,039 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,505,500 | 1,241,481 | 1,241,481 | -- | 6,142,590 | 3,435,980 | 3,549,880 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 51,653,340 | 56,176,787 | 79,988,981 | 44,361,338 | 41,340,000 | 35,216,269 | 55,522,773 | 68,173,532 |
| | மொத்தம் | 62,240,765 | 64,603,275 | 89,187,922 | 50,619,342 | 56,056,890 | 48,831,409 | 69,605,955 | 75,203,989 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| (i) மீளாய்வாண்டு இறுதியில் அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இனை விஞ்சிய 43 ஆதனங்களில் இருந்து ரூபா 419,545 ஆன மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இது தொடர்பாக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி அறிவிட நடைமுறை நிகழ்சித் திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், நிலுவை அறிவிப்புக் கடிதம் அனுப்பியுள்ளதென. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ii) 2013 ஆண்டு முதல் பிரதேச சபைக்கு சொந்தமான செயலிழந்துள்ள 09 நீர் உத்தேச திட்டங்களின் 70 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 803,614 ஆன நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புத்தகத்திலிருந்து பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான புஸ்ஸல்லாவயில் அமைந்துள்ள கடையறைகளிலிருந்து 2012 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 397,707 ஆன தொகையை அறவிட நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புத்தகத்திலிருந்து பதிவழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான தகவல்கள் தயாரிக்கப்பட்டு வருவதென. | கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபைக்கு சொந்தமான புஸ்ஸல்லாவயில் அமைந்துள்ள 10 தற்காலிக கடையறைகளிலிருந்து 2014 ஆண்டு முதல் ரூபா 2,030,454 ஆன நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை தொகையை செலுத்துமாறு அறிவித்து ஏழுத்துமூலம் அறிவூட்டல் அனுப்பியுள்ளதென. | கடை வாடகை காலரீதியாக அறவிடப்பட வேண்டும். |
| (iii) | தொழுவ வாராந்த சந்தை கீழ் மாடியில் அமைந்துள்ள 02 கடையறைகளில் இருந்தும், தொழுவ சந்தையின் மேல் மாடி மற்றும் வாராந்த சந்தை வருடாந்த டென்டர் வழங்கிய 10 கடையறைகளில் இருந்தும், 05 ஆண்டு மற்றும் 01 ஆண்டிற்கிடையிலான கால வீச்சளவாக ரூபா 65,065 ஆன நிலுவை தொகை காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிட கடிதம் அனுப்பியுள்ளதென. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**(இ) அறிவித்தல் பலகை கட்டணம்**

| | | |
|---|---|---|
| 09 நிறுவனங்களின் 68 அறிவித்தல் பலகைகளிலிருந்து ரூபா 2,327,720 தொகை 02 ஆண்டிற்கு அதிக காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையிலிருந்து ரூபா 606,913 தொகை அறவிட்டுள்ளதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும் |

**(ஈ) முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதி இலக்கம் 2196/50 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்டுள்ள வாடகை வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்காக, அறவிட வேண்டிய ரூபா 1,291,000 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையிலிருந்து ரூபா 97,200 தொகை அறவிட்டுள்ளதென. | முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை ஒழுங்குபடுத்தி வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 79 முதல் 84 வரையான பிரிவுகளின் பிரகாரம், சபை அதிகார பிரதேசத்தினுள் பொது கால்வாய் நிர்மாணித்தல், திருத்துவதுடன் தொடர்பான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் சபையினால் வடிகால் தொடர்பாக எவ்வித அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. | பாதை நிர்மாணிப்பதற்காக முன்னுரிமை வழங்கிய காரணத்தால், இந் நிலைமை ஏற்பட்டுள்ளதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், மலசல கழிவு எடுத்துச் செல்லல் மற்றும் கழிவகற்றல் பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள மற்றும் மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்க சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள உத்தேசம் குழுவிற்கு முன்வைக்கப்பபட்டுள் ளதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | 1987 இன் ஆகஸ்ட் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 119 பிரிவின் பிரகாரம் சபையினால் வாராந்த சந்தை ஒன்றை நடாத்திச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வாராந்த சந்தையொன்றை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுப்பதென. | சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் மீளாய்வாண்டில், உக்கலடையும் கழிவு 257 மெட்ரிக் டொன் அளவு சேகரிக்கப்பட்டிருந்த போதும், சபையினால் இயற்கை பசளை உற்பத்தி செய்ய அல்லது ஏனைய முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு செல்லாது உக்கலடையும் கழிவுகளை குண்டசாலை அழுத்வத்தயில் அமைந்துள்ள இயற்கை பசளை உற்பத்தி செய்யும் நிலையத்திற்கு வழங்கியதற்காக குண்டசாலை பிரதேச சபைக்கு ரூபா 307,872 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கழிவுகளை வெளியிடுவதை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவ முறையொன்றை பின்பற்ற வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உள்ளூராட்சி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு பங்குபற்றுவதற்கு 2019 ஆண்டில், இரண்டு உறுப்பினர்களிற்காக ரூபா 120,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | உரிய தொகையை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த இரண்டு உறுப்பினர்களினால் பாடநெறியை பூர்த்தி செய்திருக்கவில்லை. இதற்காக சபைனால் செலுத்திய தொகையில் இருந்து ரூபா 75,000 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | புஸ்ஸல்லாவயில் அமைந்துள்ள செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் மீளாய்வாண்டில், எவரும் குடியிருக்காத போதும், 2023 மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை ரூபா 37,999 ஆன நீர் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளதில் குறித்த இல்லம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | குறித்த இல்லத்தை வாடகைக்கு வழங்க தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதென. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆண்டில் ரூபா 45 மில்லியன் செலவில் நிர்மாணித்திலிருந்த புஸ்ஸல்லாவ புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் 14 கடையறைகளிற்கு பழைய 14 கடை உரிமையாளர்கள் வழங்கு தாக்கல் செய்த காரணத்தால், அக் கடையறைகன் விளைவற்று காணப்பட்டன. பழைய கடை உரிமையாளர்கள் சபையுடன் முறையாக உடன்படிக்கை செய்ததாக எவ்வித தகவல்களும் சபையிடம் இருக்காததுடன், தற்போது 06 கடை உரிமையாளர்கள் வழக்கிலிருந்து கேட்டு விலகி சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், குத்தகைதாரர் அல்லாத தரப்பினர் நீதிமன்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்காக வழக்கு கட்டணமாக ரூபா 236,000 தொகை செலவிட நேர்ந்திருந்தது. | கௌரவ நீதிமன்றத்திற்கு விடயங்களை அறிக்கையிட்டு வழக்கு கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புஸ்ஸல்லாவ பொது வியாபார கட்டிடத் தொகுதியில் சீ – 04 கொண்ட கடையறையை 2013 ஆண்டில், ரூபா 2,000,000 இற்கு நீண்ட கால குத்தகை வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டில் இறுதிவரை டென்டர் தொகையின் ரூபா 860,000 தொகை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்துள்ளதென. | நிலுவை தொகையை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொழுவ வாராந்த சந்தை கீழ் மாடியில் அமைந்துள்ள 13 கடையறைகள் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமலாக மதிப்பீடு செய்யாது மாதாந்தம் ரூபா 500 தொகைக்கு டென்டர் செய்யாது குத்தகை வழங்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளதென. | கடையறைகளை மதிப்பீடு செய்து வரி அறவிட வேண்டும் |
| (ஈ) | புஸ்ஸல்லாவ கழுகலவத்த கலாசார மண்டபத்தை நிர்மாணிக்க 2008 ஆண்டில், இளைஞர் முன்னேற்றம் மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் மீது ஒப்பந்ததார சங்கத்தினால் ரூபா 956,809 வேலை பெறுமதிக்கு நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்ததார சங்கத்திற்குரிய பெறுமதியை செலுத்தாத காரணத்தால், ஒப்பந்ததார சங்கத்தினால் வழங்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 24 திகதி வழங்கு தீர்ப்பின் பிரகாரம், ஒப்பந்ததாரர் ரூபா 2,519,240 இழப்பீட்டை செலுத்த சபைக்கு கட்டளையிட்டு அதில் ரூபா 1,007,696 செலுத்தப்பட்டிருந்தது. சபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | குறித்த விசாரணை நடவடிக்கையின் மீது முன்நடவடிக்கை மேற்கொள்வதென. | பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 956,809 ஆன வேலை கடன்படுனர் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | நி.பி 104(3) விசாரணை பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை மேற்கொள்வதென. | பெறவேண்டிய மீதியை அறவிட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய கடன்கொடுனர் மீதி ரூபா 7,611,809 ஆனதுடன், அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 956,809 தொகை அறவிட்டிருக்கவில்லை. | நி.பி 104(3) விசாரணை பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை மேற்கொள்வதென. | செலுத்த வேண்டிய மீதியை தீர்க்க வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மற்றும் 2023 ஆண்டுகளில், அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்திருந்த கட்டிட அபிவிருத்தி விண்ணப்பங்களிற்கு இடையில் 18 விண்ணப்பங்களிற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு அங்கீகாரம் கிடைக்காத விண்ணம் தொடர்பாக பின்னூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பித்திருந்த விண்ணப்பங்களிற்கு இடையே 10 விண்ணப்பங்களிற்காக அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | அங்கீகாரம் வழங்காத நிர்மாணம் தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 4,450,000 ஆன 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 02 உத்தியோகபூர்வ இல்லங்கள், 02 ஆண்டுகளிற்கும் 19 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக விளைவற்று காணப்பட்டன. | விளைவற்று காணப்படுவதென. | உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் தேவைப்பாடு தொடர்பாக கவனத்திற் கொள்ளாது கொள்வனவு செய்திருந்த ரூபா 85,488 ஆன 156 தொகுதி வீதிவிளக்குகள் பயன்படுத்தாது களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | திருத்த வேலைகள் மற்றும் புதிய வீதிவிளக்கு பொருத்துவதற்காக பயன்படுத்தியுள்ளதென. | தேவைக்கேற்ப, கொள்வனவு செய்ய வேண்டும். |

### 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வத்தஹேன நீர் கருத்திட்டத்திற்காக குளோரினேட்டர் ஒன்றை கொள்வனவு செய்ய 2023 ஜுன் 09 திகதி 05 நிறுவனங்களிலிருந்து விலைகள் கோரப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு நிறுவனம் மாத்திரம் விலைகளை சமர்ப்பித்திருந்தது. அந்த விலைகள் அளவுத்திட்டத்திற்கு இணங்காத காரணத்தால், மீண்டும் விலைகளை கோர வேண்டிய போதும், அவ்வாறு மேற்கொள்ளாது மின் அஞ்சல் மூலம் ஒரு நிறுவனத்திடம் இருந்து பெற்ற விலைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 289,800 பெறுமதியுடன் கூடிய குளோரினேடர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பாட்டின் மீது வில்கமுவ வலயத்திற்கு பிரதான செயலாளர் அலுவலகத்தின் புறநெகும் கருத்திட்டத்தற்கு குளோரினேட்டரை கொள்வனவு செய்ய விலைகளை கோரியது தொடர்பான பெறுகைகள் தீர்மானத்தையே செயற்படுத்தி குறைந்தபட்ச விலைக்கு கொள்வனவு செய்திருந்த குளோரினேட்டர் இயந்திரத்தையே கொள்வனவு செய்ததென. | வெளிப்படைத் தன்மையுடன் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்த அபிவிருத்தி உத்தேசங்களிற்காக மீளாய்வாண்டின் போது (2023 இன் முதல் 06 மாதங்களில்) பாதை அங்கீகார விலை வீதங்களை (HSR) பயன்படுத்த வேண்டிய போதும், முறையான | 2023 மார்ச் வரை 2023 ஆண்டிற்கான விலை பகுத்ததாய்வுகள் தொழிநுட்ப அலுவலரிற்கு கிடைக்கவில்லையென. | கருத்திட்டத்தை மேற்கொள்ளும் காலத்தில் பாதை அங்கீகார விலை வீதங்களை (HSR) பயன்படுத்தாதது |

| | | |
|---|---|---|
| கண்காணிப்பு மற்றும் தொழில்சார் பொறுப்புடன் நடவடிக்கை எடுக்காது பாதைகள், கால்வாய் மற்றும் மதகுகள் நிர்மாண 29 கருத்திட்டங்களிற்காக 2022 ஆண்டின் இறுதி காலாண்டில் பாதை அங்கீகார விலை வீதங்கள் (HSR) மீது மதிப்பீடு தயாரித்து கொடுப்பனவு செய்த காரணத்தால், பிரதேச சபை நிதியத்திற்கு ரூபா 621,240 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | | தொடர்பாக அலுவலர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) யடிபியன்கல நயாபான பாதையை அபிவிருத்தி செய்தல் - ரூபா 2,169,601** | | |
| பாதை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தில் சமர்ப்பித்திருந்த பட்டியல்கள் பிரகாரம், இலக்கம் 01 இன் கீழ் கட்டம் 04 இற்காகவும் பாதை மேற்பரப்பை கற் துகல்களை நிரப்பி தளர்த்தி மட்டப்படுத்துவதற்கு 216.04 கனமீற்றரிற்கு ரூபா 151,263 செலுத்தி இருந்த போதும், 05 இடங்களில் பாதையை உடைத்து பரீட்சிக்கும் போது கற் துகல்கள் அல்லது ABC இடப்பட்டிருக்காததால், மேற்கொள்ளாத பணிகளிற்கு ரூபா 151,263 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 02, 03, 04 இன் கீழ் கட்டம் 01, 02, 03 மற்றும் 04 இற்காக மி.மி 50 மற்றும் மி.மி 19 கற்கள் தடிப்பு மீற்றர் 0.075 அளவிற்கு பரப்பி தளர்த்துவதற்கு மதிப்பீடு செய்து 71.28 கன மீற்றரிற்கு ரூபா 724,363 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த பாதையை 05 இடங்களில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது, இந்த பாதையின் மேற்பரப்பின் தடிப்பு 0.050 மீற்றர் ஆனதில், மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதும் ரூபா 241,454 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுத்தற் பணத்திலிருந்து மேற்கொள்ளாத வேலைக்காக செலுத்திய தொகையை சபை நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளவும், எஞ்சிய தொகையை விடுவிக்கவும் நடவடிக்கை எடுப்பதென. | மேற்கொள்ளாத வேலைகளிற்காக கொடுப்பனவை பரிந்துரைத்த அலுவலர்களை இனங்கண்டு அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) மஹர ஓர்வேல் பிரிவில் டீ.எம். அதுல மெதகெதர அவர்களின் வீட்டிற்கு அருகில் இருந்து எஞ்சிய பகுதியை கொன்கிரீட் இடல் - ரூபா 543,446** | | |
| இப் பாதையின் பௌதீக பரீட்சிப்பின் போது, பாதையின் இறுதிப் பகுதியின் நீலம் 12.6 மீற்றர், அகலம் 3.01 மீற்றர் மற்றும் தடிப்பு 0.125 மீற்றர் பகுதியில் கற்கல் கலன்றிருந்ததால், 4.748 கன மீற்றர் அளவிற்று ரூபா 158,427 தொகை பலவீன கொன்கிரீட் கலவைக்கு செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | வேலையை கண்காணிப்பு செய்த தொழிநுட்ப அலுவலர் ஓய்வூ பெற்றுள்ளதால், அவருடன் வேலையை பரீட்சித்து அறிக்கை இடுவதென. | நிர்மாணங்களை உரிய நியமத்திற்கு மேற்கொண்டதனை பரீட்சிக்காத அலுவலர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) புபுரஸ்ஸ நகரில் பொது மலசல கூடமொன்றை நிர்மாணித்தல் ரூபா 2,000,000**

| | | |
|---|---|---|
| கருத்திட்டத்திற்குரிய கோவையை பரீட்சிக்கும் போது, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 05 அத்தியாத்தின் 5.4.4 பிரகாரம், ஏற்றுக் கொள்ளக்கூடிய முற்பணம் செலுத்தும் காப்பொன்றை சமர்ப்பித்ததன் மீது ஒப்பந்த பெறுமதியின் 20 சதவீத உச்சம் வரை முற்பணம் செலுத்த முடியுமான போதும், அந்த அறிவுறுத்தலை பின்பற்றாது, 2023 நவம்பர் 06 திகதி ஒப்பந்த பெறுமதியின் 50 சதவீதம் அல்லது, ரூபா 1,000,000 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் 20 சதவீதத்திற்கு மேல் முற்பணம் செலுத்த நடவடிக்கை எடுப்பதில்லையென. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாரான ஆளணியினருடன் ஒப்பிடுகையில் 06 பதவிகளில் 22 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 10 மிகைகளும் காணப்பட்டன. | ஆரம்ப தரத்தின் வெற்றிடங்களிற்காக ஊழியர்களை ஆட்சேர்க்காதிருக்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| பணித் தடைக்குட்பட்ட மற்றும் மரணித்த 05 ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 319,424 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியத்திலிருந்து அறவிட முடியுமான நபர்களின் ஓய்வூதியத்தில் இருந்து கடன் அறவிடவும், ஒருவரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென. | அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிட வேண்டும். |